**இப்பாகமுவ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இப்பாகமுவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 466,627 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீட்டுக் குறைபாடுகள் சரிசெய்யப்பட வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் ஏற்படாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் 24 விடயங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கையேற்றலை மேற்கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | மீளாய்வாண்டில் 02 வருமான விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கஞ்செய்து | நிதிக் கூற்றுக்களுக்கும் பி.ச. 07 |

| | | | |
|---|---|---|---|
| | மீதிக்கும் பி.ச. 07 அறிக்கையின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 254,509 இணக்கமின்மை காணப்பட்டது. | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | படிவத்திற்குமிடையே நிலுவை கடை வாடகை வேறுபாடு ரூபா 233,740 தொகை பி.ச. 07 இல் கடை வாடகை சிட்டையிடப்பட்ட காரணத்தினால் ஏற்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களுக்கும் பி.ச. 07 படிவத்திற்குமிடையே நிலுவை ஆதன வரி வேறுபாடு ரூபா 20,768.97 தொகை கழிவு குறைக்கப்படாததால் ஏற்பட்டிருந்தது. |
| (ஈ) | ரூபா 337,414,510 பெறுமதியான 09 கணக்கு மீதிகளுக்குரிய போதியளவான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அதனை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுவதுடன் மெய்மையாய்வு அறிக்கை எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். சில மீதிகள் நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற சான்றுகள் இல்லாத மீதிகளாகும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்து.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| | 152(4) | 2018 ஆம் ஆண்டிற்காக 108 வியாபாரங்களில் இருந்து வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் செலுத்தாமல் புறக்கணித்திருந்ததுடன் அந்த தரப்பினர்களுக்கு எதிராக சடட்டரீதியான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | | | |
| (i) | 193 ஆம் பிரிவு | ஒவ்வொரு வருமானம் மற்றும் செலவின விடயத்தின் கீழ் வருகின்ற மிகைகள் மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை. | விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ii) | 206 ஆம் பிரிவு | மெய்மையாய்வு சபை அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (iii) | 218 ஆம் பிரிவு | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்படவில்லை. | விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு சபை நியமித்து மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 80,054,719 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 85,900,111 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 6,364,500 | 7,207,376 | 2,159,213 | 6,053,997 | 11,846,000 | 6,304,156 | 6,303,000 | 5,621,253 |
| ii. | வாடகை | 13,885,000 | 12,618,065 | 14,453,535 | 2,009,928 | 19,183,000 | 16,143,033 | 16,141,000 | 3,043,360 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,850,000 | 1,316,105 | 1,316,105 | - | 2,005,000 | 2,005,938 | 2,005,000 | - |
| iv. | ஏனைய வருமானம் | 162,694,500 | 188,177,605 | 83,785,985 | 119,717,928 | 286,897,000 | 173,146,762 | 173,147,000 | 113,674,347 |
| | மொத்தம் | 184,794,000 | 209,319,151 | 101,714,838 | 127,781,853 | 319,931,000 | 197,599,889 | 197,596,000 | 122,338,960 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,146,907 தொகை அறவிடவேண்டியிருந்தது. பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ)(ஆ) மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 32-43 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் இந்த நிலுவை அதிகரித்துக் காணப்பட்டது. | நிலுவை ஆதனவரி வருமானம் விரைவாக சேகரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 2.2.3 வாடகை மற்றும் கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய நிலுவை வாடகை மீதி ரூபா 1,806,898 ஆக இருந்தது. | உடன் படிக்கையின் பிரகாரம் வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் கொடுப்பனவு செலுத்தாதிருக்கும் போது உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைப் பணத்தை சட்ட ரீதியான வழிகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அறவிட முடியாத மீதியை பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பண நிலுவை மற்றும் முத்திரைக் கட்டண நிலுவை என்பன முறையே ரூபா 4,950,875 மற்றும் ரூபா 109,000,000 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் முத்திரைக் கட்டண மிகை மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டடுள்ளது. | நிலுவை வருமானத்தை சேககரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முத்திரைக் கடட்ணம் எவ்வளவு என நிரந்தரமாக காண்பிக்க முடியாதிருந்தமையால் மதிப்பீட்டுத் தொகையாக முத்திரை வருமானம் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**எதிர்பார்த்த நலன்கள் பெறப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சாத்திய வள ஆய்வு இன்றி 2017ஆம் ஆண்டின் ரூபா 693,412 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட மீன் சந்தை கட்டிடம் உரிய பணிகளில் ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் ஏனைய வியாபார நடவடிக்கைகளுக்கேனும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆதனங்ளை பேணிச் செல்வதற்கு நடவடிதக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம் மீன் அல்லது இறைச்சி கடைகளுக்காக மாத்திரம் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டவையால் அதற்காக மூன்று தடவைகள் கேள்வி கோரப்பட்டிருந்தும் எவரும் முன்வந்திருக்கவில்லை. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 85,534,685 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ஒரு வருடத்தை விஞ்சிக் காணப்பட்ட ரூபா 16,994,031 தெமாகையான கடன்கொடுத்தோர் மீதியும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட வேலைக் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 1,159,893 தொகையும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட வற்வரி ரூபா 554,271 தொகையும், ஓய்வூதிய | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் செலுத்துவதற்கு அல்லது ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியம் ரூபா 4,052,433 தொகையும் இருந்தன. | | |
| (ஆ) | பத்தலகொட சிறுவர் பூங்காவில் ரூபா 1,294,439 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாற்சாலை ஒன்று 2019 பெப்ரவரி 13 வரையிலும் எந்தவொரு கடப்பாடு மற்றும் கட்டணங்கள் இன்றி தனியார் தரப்புக்கு நடாத்திச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்காக கேள்மவி கோரப்பட்டிருந்தும் அதில் எந்த ஒருவரினாலும் பெறபபடாதிருந்தமையை தயவுடன் அறியத் தருகின்றோம். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 16 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமான பரிசோதகர், முன் பள்ளி பாடசாலை ஆசிரியர், முகாமைத்துவ உதவியாளர் போன்ற பதவிகளின் வெற்றிடங்களுக்காக மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட வேண்டும். வீதி தொழிலாளர் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 திசெம்பர் 30 ஆம் திகதிய 2016/01ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்திக்கு முரணாக உள்ளூ ராட்சி வீதிகளை நிர்மாணிக்கும் போதும் அபிவிருத்தி செய்யும் போதும் அவற்றிக்கு கற்கள் இட்டு காபட் இடுதல், தார் இடல் அல்லது கொங்கிரீட் இடப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டில் 38 வீதிகளுக்காக ரூபா 12,172,648 தொகை செலவில் கிரவல் இடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 22 உறுப்பினர்களில் இருந்து 43 வரை அதிகரித்தமையால் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்கு காண்பிக்கின்ற விருப்பத்தினால் அதிகார பிரதேசம் விரிவடைந்தமை வீதி முறைமை அதிகரித்தமை, பொதுமக்களின் கோரிக்கை அடிப்படையில் சுற்றறிக்கையை மீறிச் செல்வதற்கு ஏற்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | லேனவ தட்டாவல உப வீதிக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்யும் வேலையின் வேலை விடய இலக்கம் 01,02,03 இன் கீழ் 425 கன மீட்டரில் கிறவல் இட்டு கோவையிடப்பட்ட 150 மி.மீ கனத்தில் வீதியில் பரவலாக்குவதற்கு ரூபா 859,775 தொகை செலுத்தப்பட்ட போதிலும் 22 இடங்களில் 4x4 அங்குல அளவிலான குழியைத் தோண்டி பரீட்சித்த போது 50 மில்லி மீட்டர் அளவில் மாத்திரம் கிரவல் இடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வீதியில் இடப்பட்ட கிறவலின் அளவு 142 (50/150x425) கன மீட்டர் ஆனமையால் ரூபா 507,509 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | நிர்மாண நடவடிக்கைகள் முறையாக மேற் கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதிக பாரமுள்ள வாகனங்கள் அதிகளவில் பிரயாணம் செய்ததால் மேற்பகுதியில் கிரவல் படையின் தடிப்பம் சீராக குறைவடைந்து செல்லும் நிலைக்கு உட்பட்டிருந்தது. |
| (இ) | மெல்சிறிபுர சுடலைக் கூடத்தின் கூரைக்கு நிறங்களைப் பூசும் வேலையில் வேலை விடய இலக்கம் 01 மற்றும் 02 இன் கீழ் ஒரு தடவை முதலாவது நிறம் பூசுதலும் அதனுடன் இரண்டாவது தடவை கால நிலைக்கு ஈடுகொடுக்கும் இமல்ஷன் நிறப்பூச்சிக்கு 503.75 சதுர மீட்டருக்காக ரூபா 312,314 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பௌதீக பரிசோதனையின் போது அந்த வேலைக்குரிய அலுவலக கட்டிடம் மற்றும் பாதுகாப்புக் கொட்டகையின் கூரையின் ஆரம்ப நிறப்பூச்சு இன்றி நிறம் பூசப்பட்டிருந்தது. | நிர்மாண நடவடிக்கைகள் முறையாக மேற் கொள்ளப்பட வேண்டும். | நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு முன் அவ்வாறான வேலை விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும். |